**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| 2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27-ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 2-ம் சாட்சியின் வாக்கு மூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி கிரேடு 3 பெஞ்ச்கிளார்க் திரு.சுவர்ணரத்தினக்குமார் என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | **மூர்த்தி** | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**27.2.2024 OS No.15/2022 வா.சா.2 மூர்த்தி ஆஜர்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :**

1. வாதி அர்ஜீனன் அழைத்ததன் பேரில் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் இல்லை. தாவா சொத்துக்கு அருகில் எனக்கு சொத்து இருப்பதாக கூறியிருப்பதில் அதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து சர்வே எண், நான்குமால் தெரியுமா என்றால் தெரியாது. வாதி அர்ஜீனன் மகன் வழக்கறிஞர் பிரகாஷ் என்பவருக்கு என் மகளை திருமணம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

2. பிரதிவாதியின் தங்கை வெள்ளையம்மாள் எனது மனைவி என்றால் சரிதான். என் மனைவி வெள்ளையம்மாளுக்கும், பிரதிவாதிக்கும் சொத்து தொடர்பாக பல வழக்குகள் உள்ளது என்றால் தற்போது எதுவும் இல்லை. சொத்து சம்மந்தமாக நானும், எனது மனைவியும் பிரதிவாதி மீது காவல்நிலையத்தில் பல புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். இதுவரை எத்தனை புகார் கொடுத்துள்ளோம் என்றால் இரண்டு புகார் கொடுத்தேன். என்னை அடித்ததால் 3வது புகார் கொடுத்தேன். எங்களுக்கும், பிரதிவாதிக்கும் பாகப்பிரச்சனை உள்ளது என்றால் சரிதான்.

3. இதுவரை எங்களுக்கும், பிரதிவாதிக்கும் பாகம் பிரிக்கவில்லை என்றால் சரியல்ல. எங்கள் பாகத்தை ஒதுக்கிவிட்டு அவர்கள் பாகத்தை பிரித்துக்கொண்டார்கள். எங்களுக்குள் சொத்து தொடர்பாக பாக பிரச்சனை உள்ளதால் பிரதிவாதிக்கு எதிராக வாதிக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இன்றுவரை பிரதிவாதிதான் தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ளார் என்றாலும், வாதி அனுபவத்தில் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.